ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2023.11.30 |

# கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2023 நவெம்பரில் அதிகரித்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு, 2021=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2023 ஒத்தோபரில் 1.5 சதவீதத்திலிருந்து 2023 நவெம்பரில் 3.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. முதன்மைப் பணவீக்கத்தில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பானது அநேகமாக 2023 நவெம்பரில் இலங்கை மத்திய வங்கியினால் எதிர்பார்க்கப்பட்ட எறிவுகளிற்கு இசைவாக காணப்படுகின்றது.

| பணவீக்கம் கொநுவிசு (2021=100) | 2023 ஒத்தோபர் | 2023 நவெம்பர் |
|---|---|---|
| சுட்டெண் பெறுமதி | 191.4 | 193.4 |
| மாதாந்த மாற்றம் (%) | -0.2 | 1.0 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 1.5 | 3.4 |

குறிப்பு: தொ.பு.திணைக்களத்திற்கமைவாக, ஆ.ஆண்டுப் பணவீக்கமும் மாதாந்த மாற்றமும் முழுத்தானமாக்கப்பட்ட சுட்டெண் இலக்கங்களைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டன.

உணவுப் பணச் சுருக்கமானது (ஆண்டிற்காண்டு), 2023 ஒத்தோபரின் 5.2 சதவீதத்திலிருந்து 2023 நவெம்பரில் 3.6 சதவீதத்தைப் பதிவுசெய்து தொடர்ச்சியாக ஐந்தாவது மாதமாகவும் தொடர்ந்திருந்தது. அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு) 2023 ஒத்தோபரின் 4.9 சதவீதத்திலிருந்து 2023 நவெம்பரில் 6.8 சதவீதமாக அதிகரித்தது. கொ.நு.வி.சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2023 நவெம்பரில் 1.06 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. முறையே 0.12 சதவீதம் மற்றும் 0.95 சதவீதமாகவிருந்த உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் இதற்கு காரணமாக அமைந்தன. பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு) 2023 ஒத்தோபரின் 1.2 சதவீதத்திலிருந்து 2023 நவெம்பரில் 0.8 சதவீதமாக குறைவடைந்தது.

கொநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)




பொருத்தமான கொள்கை வழிமுறைகள் அத்துடன் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு பணவீக்கம் நடுத்தர காலத்தில் 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்தை அண்மித்து நிலைநிறுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், எதிர்பார்க்கப்படும் வரி அதிகரிப்புக்கள் மற்றும் அவற்றின் சாத்தியமான இரண்டாம் சுற்றுத் தாக்கங்கள் என்பன நிருவாக ரீதியாக நிர்ணயிக்கப்படுகின்ற விலைகளுக்கு சாத்தியமான மேல்நோக்கிய சீராக்கங்களுடன் ஒன்றிணைவதன் மூலம் குறுகிய காலத்தில் பணவீக்கத்தில் நிலைமாறு அதிகரிப்பொன்று நிகழலாம்.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்[அ]**

**கொநுவிசு[ஆ], காலாண்டுச் சராசரி, ஆண்டிற்கு ஆண்டு, %**




பணவீக்க வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையை இங்கு தெளிவுபடுத்துகின்றது. நிலவுகின்ற உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள் அத்துடன் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில் தற்போதைய எறிவுகளுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களை விட மிகவும் உயர்வானவையாகும். இவ்விடர்நேர்வுகள் ஒன்றில் வெளிப்படையாகவே அல்லது உள்ளார்ந்தமாகவோ எறிவுகளில் ஏற்கனவே உள்ளகப்படுத்தப்பட்ட மட்டங்களிலிருந்து விலகுகின்ற பல்வேறு காரணிகளின் சாத்தியப்பாடு காரணமாக தோன்றுகின்றன. குறிப்பாக, அதிகரிக்கப்படும் வரிகளின் சாத்தியப்பாடு அத்துடன் தொடர்புபட்ட இரண்டாம் சுற்றுத் தாக்கங்கள், சாத்தியமான சம்பள உயர்வுகள், சக்தி விலைகளில் பாரிய அதிகரிப்புக்கள், தளர்த்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஏதேனும் எதிர்பார்க்கப்பட்டதைவிட பாரிய செலாவணி வீதத் தேய்வடைதல், வேளாண்மை உற்பத்தி மீதான சாத்தியமான பாதகமான வானிலைத் தாக்கம் இதன் பயனாக உணவுப் பணவீக்கம் போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளுக்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படக்கூடும். அதேவேளை, பணவீக்க எறிவுகளுக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளாக வழங்கல் நிலைமைகளின் விரைவான மீட்சி பற்றிய சாத்தியப்பாடு பொதுமக்களின் குறைவடைந்த கொள்வனவு சக்தியின் நிலையான தாக்கம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

*மூலம்:இலங்கை மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்*

அ. 2023 நவெம்பர் எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்களை வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள எறிவுகள் பிரதிபலிக்கின்றன.
ஆ. 2022 நான்காம் காலாண்டு வரையான தேறிய தரவுகள் கொநுவி சுட்டெண் (2013 =100) ஐ அடிப்படையாகக் கொண்டுள்ள அதேவேளை இக்காலப்பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொநுவி சுட்டெண் (2021=100) ஐ அடிப்படையாகக் கொண்டவை. எதிர்வுகூறல்கள் கிடைக்கப்பெறுகின்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (கொநுவிசு, 2021=100) மூலம் கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (2021 = 100)**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2021=100)**

| காலம் | | சுட்டெண் எண்ணிக்கை | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2022 | நவெம்பர் | 187.1 | 171.1 | -0.7 | 0.4 | - | - |
| | திசெம்பர் | 187.6 | 171.5 | 0.3 | 0.2 | - | - |
| 2023 | சனவரி | 188.6 | 172.4 | 0.5 | 0.5 | 51.7 | 45.6 |
| | பெப்புருவரி | 189.5 | 172.3 | 0.5 | -0.1 | 50.6 | 43.6 |
| | மாச்சு | 195.0 | 171.9 | 2.9 | -0.2 | 50.3 | 39.1 |
| | ஏப்பிறல் | 192.3 | 171.5 | -1.4 | -0.2 | 35.3 | 27.8 |
| | மே | 192.3 | 171.0 | 0.0 | -0.3 | 25.2 | 20.3 |
| | யூன் | 192.3 | 169.9 | 0.0 | -0.6 | 12.0 | 9.8 |
| | யூலை | 190.2 | 170.4 | -1.1 | 0.3 | 6.3 | 5.9 |
| | ஓகத்து | 190.1 | 171.2 | -0.1 | 0.5 | 4.0 | 4.6 |
| | செத்தெம்பர் | 191.8 | 172.0 | 0.9 | 0.5 | 1.3 | 1.9 |
| | ஒத்தோபர் | 191.4 | 172.4 | -0.2 | 0.2 | 1.5 | 1.2 |
| | நவெம்பர் | 193.4 | 172.4 | 1.0 | 0.0 | 3.4 | 0.8 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்